**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் மா.ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,
ஐயா,

தேதி: 03.11.2025

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் கண் பாதுகாப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி மற்றும் இலவச கண் பரிசோதனை முகாம்

மாணவர்கள் நல மையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் மற்றும் வசன் ஐ கேர் பிரைவேட் லிமிடெட், கோயம்புத்தூர் ஆகியவற்றின் ஏற்பாட்டில் கண் பராமரிப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி மற்றும் இலவச கண் பரிசோதனை முகாம் நவம்பர் 1, 2025 அன்று நடைபெற்றது. மாணவர்கள் மற்றும் பேராசிரியர்களிடையே கண் பாதுகாப்பின் முக்கியத்துவம் மற்றும் கண் பராமரிப்பு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் இந்நிகழ்வினை மாணவர்கள் நல மைய முதன்மையர். முனைவர் ஜெ. இராமலிங்கம் துவக்கி வைத்தார். தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக மருத்துவ அதிகாரி மருத்துவர் தோ. ரம்யா நிகழ்ச்சியின் குறிக்கோள்களை விளக்கினார்.

கண் அறுவைச் சிகிச்சை நிபுணர், மருத்துவர் ஏ. ஜக ஜனனி, தமது உரையில் வழக்கமான கண் பரிசோதனைகள், முன்கூட்டியே கண்டறிதல், மற்றும் சிகிச்சை முறைகள் ஆகியவை பார்வை குறைபாடுகளைத் தடுப்பதில் எவ்வளவு முக்கியம் வகிக்கின்றன என்பதை வலியுறுத்தனர்

வாசன் ஐ கேர் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் கண் மருத்துவர்கள் மற்றும் மருத்துவ நிபுணர்கள் குழு பொதுவாக காணப்படும் கண் நோய்கள், பராமரிப்பு முறைகள், மற்றும் டிஜிட்டல் சாதனங்களின் அதிகப்படியான பயன்பாட்டால் ஏற்படும் கண் சோர்வு போன்ற தலைப்புகளில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்தினர்.

விழிப்புணர்வு அமர்வுக்குப் பிறகு, மாணவர்கள் மற்றும் பணியாளர்களுக்காக இலவச கண் பரிசோதனை முகாம் நடத்தப்பட்டது. இதில் 400க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர். அதில் 220 மாணவர்கள் மற்றும் பணியாளர்கள் விரிவான பார்வை திரையிடல், மறு விலகல் (refraction) பரிசோதனை, மற்றும் மருத்துவ ஆலோசனை பெற்றனர். தேவையானவர்களுக்கு மருந்து பரிந்துரைகள் மற்றும் மேலதிக சிகிச்சை குறித்த ஆலோசனைகளும் வழங்கப்பட்டன. நிகழ்ச்சி நிறைவில் முனைவர் எஸ். கவிதா இணை பேராசிரியர் அவர்கள் நன்றி உரையை வழங்கினார்.

**மக்கள் தொடர்பு அலுவலர்**